# அருள் வேண்டும் மரியன்னையே

அருள் வேண்டும் மரியன்னையே
மகிழ்வாய் நாம் வாழவே
குறை தீர்க்கும் உன் கருணையே
துயர் மேகம் மறையுமே
இருள் என்ன இடிசூழவே
உன்னாலே தழசை மாறுமே
அருள் என்ற மொழி போதுமே
கருணைக்கு நிகர் இல்லையே

**1**
தமிழர் தம் மொழியும் கலையும்
இங்கும் வாழவே
குழந்தைகள் தமது பண்பை
நாளும் போற்றவே
புதுமையில் பூத்த மாதாவே
ஆழகினை என்றும் அணிந்தவளே
உலகத்தின் தாயே மரியே சொல்

( அருள் )

**2**
விடுதலை வேண்டும் தாயே
அன்னை பூமியில்
விடியுமா எங்கள் வானம்
உந்தன் ஆசியில்
புலம் பெயரும் நம் வாழ்வில் ஏன்
சுமைகளையே சுமக்கின்றோம்
கருணையின் கடலே பதில் சொல்லு

( அருள் )